35

சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – அறிவிப்பு – தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு உகந்த பணியிடங்களை கண்டறிய தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக் குழு அமைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-3.1)த் துறை

அரசாணை (நிலை) எண்: 25 நாள்: 19.09.2022.

சுபகிருது, புரட்டாசி 02.

திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள். 21.04.2022.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க.எண்.6605/பணியமர்த்தல்/2022, நாள் 22.04.2022.

******

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத் தொடரில், 21.04.2022 அன்று மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> "தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு தகுந்த வேலைவாய்ப்பினை கண்டறிய தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகளை உள்ளடக்கிய உயர்மட்டக்குழு அமைத்து வேலைவாய்ப்பு வழங்க நடவக்கை மேற்கொள்ளப்படும்".

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், மேற்படி அறிவிப்பினை செயல்படுத்த, அரசு துறை வேலைவாய்ப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு வழங்க ஏதுவாக, மாற்றுத் திறனாளிகளுக்கான உகந்த பணியிடங்களை கண்டறிவதற்கு நிபுணர் குழு அமைக்கப்பட்டதைப் போன்று, தனியார் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கென உகந்த பணியிடங்களை கண்டறிந்து, வேலைவாய்ப்பு வழங்க தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்புகளை உள்ளடக்கிய உறுப்பினர்களை கொண்ட உயர்மட்டக் குழுவினை அமைக்கலாம் என அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்து, தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு உகந்த பணியிடங்களை கண்டறிய தலைமைச் செயலாளர் தலைமையில் பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கிய உயர்மட்டக் குழு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| (i) | தலைமைச் செயலாளர் | தலைவர் |
| (ii) | அரசு செயலாளர்,<br>மாற்றுத்திறனாளிகள் நலத்துறை | உறுப்பினர்<br>செயலர் |
| (iii) | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை | உறுப்பினர் |
| (iv) | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை | உறுப்பினர் |
| (v) | அரசு செயலாளர்,<br>குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை | உறுப்பினர் |
| (vi) | மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் | உறுப்பினர்<br>கூட்டுநர் |
| (vii) | ஆணையர்,<br>தொழிலாளர் நலத்துறை, சென்னை 6 | உறுப்பினர் |
| (viii) | இயக்குநர்,<br>வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை–32 | உறுப்பினர் |
| (ix) | இயக்குநர்,<br>தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை–32 | உறுப்பினர் |
| (x) | ஆணையர்,<br>தொழில் வணிக ஆணையரகம்,<br>சென்னை 32. | உறுப்பினர் |
| (xi) | <u>அரசு சாரா தொண்டு நிறுவங்களின் பிரதிநிதிகள்</u><br>1. ஸ்ரிஷ்டி சிறப்புப் பள்ளி (Sristi Special School),<br>கோணமங்களம், திண்டிவனம் தாலுக்கா, விழுப்புரம்.<br>2. ஸ்வபோதினி சிறப்புப் பள்ளி (Swabodhini Special School),<br>எண்.21, ராஜகோபாலன் 2வது தெரு, முதல்கடற்கரை சாலை, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை – 41. | உறுப்பினர்<br><br>உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| | 3. வொர்த் அறக்கட்டளை ( Worth Trust), எண்.48, புதிய திருவலம் ரோடு, காட்பாடி, வேலூர்– 47 | உறுப்பினர் |
| (xii) | திரு.N.K.ரங்கநாத், 57, சுப்ரமணியன் தெரு, அபிராமபுரம், சென்னை–18. | உறுப்பினர் |
| (xiii) | திரு.N.மாதவன், 24, மேற்கு பூங்கா சாலை, ஷெனாய் நகர், சென்னை–30. | உறுப்பினர் |
| (xiv) | திரு.P.இராஜசேகரன், V–shesh Learning Services Private Limited, சூர்யா 2–வது மாடி, 8/16, குறுக்குத்தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை–18 | உறுப்பினர் |
| (xv) | டாக்டர். துரைசாமி, நிறுவனர் மற்றும் தலைவர், சக்தி மசாலா, 3/18, தயா சத்தியன் தெரு, ரெட்டி குப்பம், கோயம்பேடு, சென்னை–107. | உறுப்பினர் |
| (xvi) | டாக்டர். சாந்தி துரைசாமி, இயக்குநர், சக்தி மசாலா, 3/18, தயா சத்தியன் தெரு, ரெட்டி குப்பம், கோயம்பேடு, சென்னை–107. | உறுப்பினர் |
| (xvii) | திருமதி. மிரிணாலினி, ஆர்.ஜா துணை மேலாளர், சயின்டிபிக் பப்ளிசிங், சர்வீசஸ், (பி) லிமிடெட், சென்னை | உறுப்பினர் |

<u>தனியார் நிறுவனங்களில் பணியிடங்கள் கண்டறியும் உயர்மட்டக் குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நிர்வாக சூழ்நிலைகளுக்கு ஏற்ப கூடி, கீழ்கண்ட கொள்கை முடிவுகள் எடுப்பதற்கு அரசுக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கும்.</u>

1. தமிழ்நாட்டில் அமைந்துள்ள இருபது அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்டுள்ள தனியார் நிறுவனங்கள் மாற்றுத் திறனாளிகளுக்கான, சமவாய்ப்பு கொள்கையினை வெளியிடுவதை உயர்மட்டக் குழு ஊக்குவிக்கும்.
2. ஒவ்வொரு நிறுவனமும் தங்களது வலைதளத்தில் சமவாய்ப்புக் கொள்கையை வெளியிடுவதற்கு முன்னுரிமை வழங்க வழிகாட்டுதல்.
3. நிறுவன வளாகங்களின் உள்ளே கவனத்தைக் ஈர்க்கும் வகையில் இதனைக் காட்சிப்படுத்த தேவையான வழிகாட்டுதல்.
4. மேற்கண்டுள்ள வகையில் வெளியிடப்படும் சமவாய்ப்புக் கொள்கையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள் நலன் சார்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாக இருப்பதற்கு வழிகாட்டுதல்.

(i) மாற்றுத்திறனாளிகள் அவர்களின் பணிகளை திறம்பட செய்வதற்கு ஏதுவாக, வசதி மற்றும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

(ii) மாற்றுத்திறனாளிகளை பணியில் அமர்த்துவதற்கு உகந்த பதவிகளின் பட்டியலை நிறுவனங்கள் உருவாக்க வேண்டும்.

(iii) பணி நியமனம், பணியிடமாற்றம், பதவி உயர்வுக்கு முந்தைய பயிற்சி, சிறப்பு விடுப்பு, குடியிருப்பு விடுதி ஒதுக்கீட்டில் விருப்பத்தேர்வு மற்றும் பிற வசதிகள் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

(iv) மாற்றுத்திறனாளிகளுக்கு, உதவி உபகரணங்கள் வழங்குதல், எளிதில் பணியிடங்களை அணுகும் வகையில் தடையற்ற சூழலை ஏற்படுத்துதல் வேண்டும்.

(v) மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்தல் மற்றும் அவர்களுக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கென நிறுவனங்கள், தகவல் தொடர்பு அலுவலரை நியமித்தல் வேண்டும்.

5. தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு பணிகளில் உகந்த வாய்ப்பு வழங்குவது தொடர்பான மேலே குறிப்பிடப்படாத இதர பொருண்மைகளில் அரசின் கொள்கை முடிவுகளை வடிவமைக்க தேவையான பொதுவான வழிகாட்டுதல்களை இவ்வுயர்மட்டக் குழு வழங்கும்.

4. மேற்குறிப்பிட்ட உயர்மட்டக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறைகளினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆணைகள் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அனுப்பப்படும் அதன்மீது தேவைப்படும் தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்
அரசு செயலாளர்

பெறுநர்

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, சென்னை-9.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9

அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்
நிறுவனங்கள் துறை,சென்னை-9

ஆணையர், தொழிலாளர் நலத்துறை, சென்னை 6

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-32

இயக்குநர், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை-32

ஆணையர், தொழில் வணிக ஆணையரகம், சென்னை 32.

ஸ்ரிஷ்டி சிறப்புப் பள்ளி (Sristi Special School),
கோனமங்களம், திண்டிவனம் தாலுக்கா, விழுப்புரம்.
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
ஸ்வபோதினி சிறப்புப் பள்ளி (Swabodhini Special School),
எண்.21, ராஜகோபாலன் 2வது தெரு, முதல்கடற்கரை சாலை, வால்மீகி நகர்,
திருவான்மியூர், சென்னை – 41.
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
வொர்த் அறக்கட்டளை ( Worth Trust),
எண்.48, புதிய திருவலம், ரோடு, காட்பாடி, வேலூர்– 47.
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
திரு.N.K.ரங்கநாத்,
57, சுப்ரமணியன் தெரு, அபிராமபுரம், சென்னை–18.
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
திரு.N.மாதவன்,
24, மேற்கு பூங்கா சாலை, ஷெனாய் நகர், சென்னை–30.
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
திரு.P.இராஜசேகரன்,
V–shesh Learning Services Private Limited, சூர்யா 2–வது மாடி,
8/16, குறுக்குத்தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை–18
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
டாக்டர். துரைசாமி, நிறுவனர் மற்றும் தலைவர்,
சக்தி மசாலா, 3/18, தயா சத்தியன் தெரு, ரெட்டி குப்பம்,
கோயம்பேடு, சென்னை–107.
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
டாக்டர். சாந்தி துரைசாமி, இயக்குநர்,
சக்தி மசாலா, 3/18, தயா சத்தியன் தெரு, ரெட்டி குப்பம்,
கோயம்பேடு, சென்னை–107.
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
திருமதி. மிரினாலினி, ஆர்.ஜா, துணை மேலாளர்,
சயின்டிபிக் பப்ளிசிங், சர்வீசஸ், (பி) லிமிடெட், சென்னை
(மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் வழியாக)

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர், அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், சென்னை – 9.
அரசு செயலாளரின் தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 20/9/22
20/9/22